**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை –6**
**மேல்நிலை சிறப்புத் துணைத்தேர்வு ஜுன்/ஜுலை 2012**
**விடைத்தாள் அச்சுப்பகர்ப்பு நகல் (Photocopy of Answer scripts) மற்றும் மதிப்பெண்கள் மறுகூட்டலுக்கு (Retotalling) On-line முறையில் விண்ணப்பங்கள் வரவேற்றல்**

**செய்திக்குறிப்பு**

மேல்நிலைத் தேர்வெழுதியோர் விடைத்தாட்களின் அச்சுப்பகர்ப்பு நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க ஜுன்/ஜுலை 2012 பருவம் முதல் On-line-ல் விண்ணப்பிக்கும் முறை முதன்முதலாக அறிமுகப்படுத்தப்படுகிறது. எனவே தேர்வர்கள் விண்ணப்பங்கள் கோரி எந்த ஒரு கல்வி அலுவலகத்தையும் அணுக வேண்டாமெனவும், On-line முறையில் விண்ணப்பிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஜுன்/ஜுலை 2012 மேல்நிலை சிறப்பு துணைத்தேர்வெழுதியோர் தாம் தேர்வெழுதிய எந்தவொரு பாடத்திற்கும் விடைத்தாளின் அச்சுப்பகர்ப்பு நகல் (Photocopy of Answer scripts) கோரியோ அல்லது மறுகூட்டலுக்கு (Retotalling) கோரியோ விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க விழைவோர் www.dge.tn.nic.in/hscxerox என்ற இணையதளத்தின் மூலம் On-line முறையில் விண்ணப்பிக்க வேண்டும்.

விடைத்தாள் அச்சுப்பகர்ப்பு நகல் கோரியோ அல்லது மறுகூட்டல் கோரியோ விண்ணப்பிப்போர் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியே விண்ணப்பிக்க வேண்டும்.

விடைத்தாள் அச்சுப்பகர்ப்பு நகல் கோரி தற்போது விண்ணப்பிப்போர், அதே பாடத்திற்கு மதிப்பெண் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க கூடாது. விடைத்தாள் அச்சுப்பகர்ப்பு நகல் பெற்ற பிறகு அவர்கள் மறுமதிப்பீடு அல்லது மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க வாய்ப்பளிக்கப்படும்.

மறுகூட்டல் மட்டும் செய்ய விரும்புவோர், விடைத்தாள் அச்சுப்பகர்ப்பு நகல் கோரி விண்ணப்பிக்க தேவையில்லை.

விண்ணப்பித்தலுக்கான காலம் 13.08.2012 (திங்கட்கிழமை)
முதல்
16.08.2012 (வியாழக்கிழமை)
வரை

**அச்சுப்பகர்ப்பு நகல் கட்டணம்**

| | |
|---|---|
| பகுதி I – மொழி | – ரூ.550/– |
| பகுதி II – மொழி (ஆங்கிலம்) | – ரூ.550/– |
| ஏனைய பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) | – ரூ.275/– |

த.பி.பா.,

**<u>மறுகூட்டல் கட்டணம்</u>**

பகுதி I – மொழி, பகுதி II – மொழி (ஆங்கிலம்) மற்றும் உயிரியல் – ரூ.305/–
(ஒவ்வொரு பாடத்திற்கும்)
ஏனைய பாடங்கள் – ரூ.205/– (ஒவ்வொரு பாடத்திற்கும்)

## <u>On-line முறையில் விண்ணப்பிக்கும் முறை</u>

தேர்வர்கள் www.dge.tn.nic.in/hscxerox என்ற இணையதளத்தில் அதில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றி, விண்ணப்பத்தினை சரியாக பூர்த்தி செய்ய வேண்டும்.

விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பாடத்திற்கும், விண்ணப்பத்தினை தேர்வர் சரியாக பூர்த்தி செய்த பின்னர், அதற்கான விண்ணப்ப எண்ணுடன் கூடிய ஒப்புகைச்சீட்டு மற்றும் வங்கி செலுத்துச் சீட்டு (Bank Challan) ஆகியவற்றை பதிவிறக்கம் (Printout) செய்துகொள்ள வேண்டும்.

பதிவிறக்கம் செய்த Challan–ஐ கொண்டு அருகிலுள்ள 'கோர் பாங்கிங்' சேவையுள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஏதாவது ஒரு கிளையில் Challan–ல் குறிப்பிட்டுள்ள தொகையினை 'அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை–6' என்ற பதவிப்பெயரில் செலுத்த வேண்டும்.

விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பித்தோர் மட்டுமே விடைத்தாளின் அச்சுப்பகர்ப்பு நகல் பெற்ற பிறகு மறுமதிப்பீட்டிற்கு அனுமதிக்கப்படுவர்.

இடம் : சென்னை–6.
நாள் : 10.08.2012

இயக்குநர்